லிருந்து கிராம மக்கள் வடக்கன்குளத்திற்கு மாற்றப்படும் பட்சத்தில் மேற்படி பழைய சார் பதிவாளர் அலுவலகங்களில் ஆவணப் பதிவு மற்றும் ஆண்டு வருவாய் பாதிப்பதோடு போதிய வேலைப் பளுவும் இராது என்பதால் வடக்கன்குளத்தில் புதிய சார் பதிவாளர் அலுவலகம் திறக்க சாத்தியக்கூறு இல்லை.

இனாம் ஒழிப்புச் சட்டம்.

* 2926 திரு. கே. ரவி அருணன் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், இனாம் கோடாறங்குளம், சிவந்திபுரம் கிராமங்கள் அரசினரால் இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டதால் அதன் பயனை பயிரிடும் விவசாயிகள் அடைய முடியாதபடி இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், இனாம் கோடாரங்குளம், சிவந்திபுரம் கிராமங்களை 1963ஆம் வருடத்திய இனாம் ஒழிப்புச் சட்டம் 28/63ல் அரசு எடுத்துக்கொண்டது தொடர்பாக இந்திய உச்ச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நிலுவையில் உள்ளது. வழக்கின் முடிவிற்கு ஏற்ப அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

9–25 மணி

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 25 ஆண்டுகள் ஆகியும் அந்தப் பலனை விவசாயிகள் அடையமுடியாதபடி இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு இதுபோன்ற வழக்குகள் இல்லாமல் இருக்க ஏதாவது சட்டத் திருத்தம் கொண்டு வர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : நான் ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது. இச்சூழ்நிலையில் இப்பொருள் பற்றி சட்டமன்றப் பேரவையில் விரிவாக விவாதிப்பது நல்லதல்ல என்று நான் கருதுகின்றேன்.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கின் விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : வழக்கு விவரம் எனக்குத் தெரியாது. கேட்டு வேண்டுமானால் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வழக்குக்குள்ளே போகக்கூடாது.

கிராம நிர்வாகச் சீர்திருத்தம்.

*8195 திரு. எம். முத்தையன் : திரு. ஏ. செங்குட்டுவன் : திரு. ஆர். அண்ணா நம்பி ; திரு. பொன். விஜயராகவன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழைய முறையில் கிராம (மணியம், கர்ணம் முறை) நிர்வாகத்தை சீர்திருத்தம் செய்யும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் ; தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிராம நிருவாக அமைப்பை ஆய்வு செய்து, அதனைச் சீரமைப்பது பற்றி அரசுக்குப் பரிந்துரைகள் செய்ய, ஓய்வு பெற்ற இ.ஆ.ப. அலுவலர் திரு. லட்சுமிகாந்தன் பாரதி தலைமையில் ஒரு குழுவை அரசு நியமித்தது. மேற்படி குழு தனது அறிக்கையினை அரசுக்கு அளித்துள்ளது. அவ்வறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. எம். முத்தையன் : தலைவர் அவர்களே, பழைய மணியக்காரர்களில் வயதான முதியவர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு ஏதாவது பென்ஷன் கொடுத்து அரசு உதவக்கூடிய திட்டம் ஏதேனும் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : முத்தையனுக்கும் பென்ஷன் கொடுப்பதற்குப் பரிசீலிக்கலாம். (சிரிப்பு).

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கிற கிராம நிர்வாக அலுவலர்களை எந்தெந்த கிராமத்திற்கு போஸ்டிங் கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அந்தந்த கிராமத்திலேயே அவர்கள் குடியிருந்து பணியாற்றுவதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.